| | | | |
|---|---|---|---|
| Headline | Police seizes bitcoin mining machines in a big electricity theft crackdown | | |
| MediaTitle | Malaysian Nanban | | |
| Date | 05 Jan 2022 | Language | Tamil |
| Circulation | 65,000 | Readership | 415,000 |
| Section | News | Page No | 6 |
| ArticleSize | 211 cm² | Journalist | N/A |
| PR Value | RM 3,683 | | |
| | | | |





# மின்சார திருட்டுக் கும்பலின் மூளையாகச் செயல்பட்டவன் கைது!

(பி.ஏ.கந்தையா)

மஞ்சோங், ஜன. 5-

பேரா மாநில போலீஸ் துறையினர் மிகப்பெரிய அளவில் மஞ்சோங் மாவட்டத்தில் மின்சாரத்தை திருடி வந்த பல நிறுவனங்களை அடையாளம் கண்டு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஓப்ஸ் பெர்செப்பாடு சோதனை நடவடிக்கையின் பயனால் இந்த சட்டவிரோத நடவடிக்கைகள் முறியடிக்கப் பட்டதாக மாநில தலைமை போலீஸ் அதிகாரி டத்தோ மியோர் பாரிடாலாத்ராஸ் வாஹிட் செய்தியாளர்களிடம் கூறினார்.

இந்நடவடிக்கை மஞ்சோங் மாவட்டத்தில் காலை 9 மணி முதல் நள்ளிரவு வரை 13 மணி நேரம் மேற்கொள்ளப்பட்டது. இதில் 154 அதிகாரிகள், 15 தொழில் நுட்ப அதிகாரிகள் மற்றும் போலீஸ் படை வீரர் களும் தெனாகா நேஷனல் அதிகாரிகளும் தீயணைப்பு மீட்புப்படை வீரர்களும் பங்கு பெற்றனர். 30 கடை வீடுகளில் சோதனை மேற்கொள்ளப்பட்டு 3.5 மில்லியன் வெள்ளி மதிப் பிலான 1,720 மிட்காய்ன் இயந் திரங்களும் பறிமுதல் செய்யப் பட்டன. இந்த விவகாரத்தில் மூளையாக செயல்பட்ட 28 வயது ஆடவன் ஒருவன் கைது செய்யப்பட்டான்.

போலீசார் இவர்களிடமிருந்து 15 மானிட்டர்கள், 22 யூனிட் சிபியூ கருவிகள், 56 மோடம்கள், ஒரு கணினி, 7 சிசிடி கேமராக்கள் முதலிய மின்னியல் தளவாடப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்றார் அவர்.

இந்த மின்சாரத் திருட்டு காரணமாக தேசிய மின்சார வாரியத்திற்கு 20 லட்சம் வரை இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இவர்களுக்கு எதிராக 1990ஆம் ஆண்டு மின்சார சேமிப்பு சட்டம் செக்ஷன் 329 விதியின் கீழ் விசாரணை நடத்தப்படும்.

Powered by: isentia